DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.1

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சித்திரை முத்து | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் அம்மன் நகரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது சித்தப்பா ஆவார். அவரது பெயர் ராயப்பன் ஆகும். எனது சித்தப்பா சென்ட்ரிங் பணிக்கு செல்வார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் தெருவைச்சேர்ந்தவர். எனது சித்தப்பாவிற்கு நெருக்கமானவர். எனது சித்தப்பாவிற்கு குடிப்பழக்கம் உண்டு. எனது சித்தப்பாவிற்கு ஆஜர் எதிரிதான் இரவு நேரங்களில் மது வாங்கிக்கொண்டு வந்து கொடுப்பார். இது விசயமாக எனது சித்தப்பாவிற்கும் எதிரிக்கும் தகராறு ஏற்பட்டு அவர்கள் இருவரையும் விலக்கிவிட்டுள்ளேன்.

கடந்த 22.07.2023ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் எனது நண்பர் ஒருவர் என்னை போனில் தொடர்புகொண்டு இந்திரா நகர் டிவி கடைக்கு முன்பு வைத்து எனது சித்தப்பாவிற்கும் எதிரிக்கும் இடையே சண்டை நடப்பதாக சொன்னார். உடனே நானும் எனது மாமா நல்லதம்பி என்பவரும் கிளம்பி அங்கு சென்றோம். அங்கு எதிரியும் எனது சித்தப்பாவும் வாய்த்தகராறு

செய்துகொண்டிருந்தனர். சென்றவுடன் நாங்கள் சண்டையை விலக்கிவிட்டோம். எனது சித்தப்பா கார்த்தீஸ்வரனிடம் தினமும் உனக்கு மது வாங்கிக்கொடுக்க முடியாது. உனக்கு மது வாங்கிக்கொடுத்தே எனது சம்பளம் எல்லாம் காலியாகிவிட்டது. இனிமேல் வாங்கிக்கொடுக்கமுடியாது என்று கூறினார். அதற்கு எதிரி கார்த்தீஸ்வரன் எனது சித்தப்பாவிடம் தினமும் நீதானே வாங்கிக்கொடுப்பாய். இன்று மட்டும் புதுசாக வாங்கிக்கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறாய் என்று சொல்லி அசிங்கமான வார்த்தைகளால் எனது சித்தப்பாவை திட்டினார். அதற்கு எனது சித்தப்பா இந்த பொளப்பு பிழைப்பதற்கு வேறுமாதிரி பிழைக்கலாம் என்று அசிங்கமான வார்த்தைகளால் கார்த்தீஸ்வரனை திட்டினார். அதற்கு எதிரி கார்த்தீஸ்வரன் எனது சித்தப்பாவை பார்த்து என்னையா அசிங்கமாக பேசினாய் என்றும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி டிவி கடையில் இருந்த பழைய டிவியின் பிக்சர் டியூபை எடுத்து எனது சித்தப்பாவின் தலையில் ஓங்கிபோட்டான். மீண்டும் மீண்டும் பிக்சர் டியூபால் தலையில் போட்டார். எனது சித்தப்பாவிற்கு தலை மற்றும் முகம் ஆகியவை சிதைந்து முகமே தெரியாத அளவிற்கு ஆகிவிட்டது. அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள். என் சித்திற்கு போன் செய்து தகவல் சொல்லிவிட்டு எனது சித்தப்பாவை 108 ஆம்புலன்சில் ஏற்றி இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது சித்தப்பாவை சிகிச்சைக்காக உள்ளே கொண்டு சென்றார்கள். நாங்கள் வெளியே காத்துக்கொண்டிருந்தோம். இரவு சுமார் 12.00 மணியளவில் எனது சித்தப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

பின்னர் இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்திற்கு புகார் மனு கொடுத்தேன். அந்த **புகார் மனு அசாஆ 1** ஆகும். இராஜபாளையம் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பாக ஆஜராகி நடந்த சம்பவம் குறித்து இரகசிய வாக்குமூலம் அளித்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த **இரகசிய வாக்குமூலம் அசாஆ 2** ஆகும். எனது

சித்தப்பாவின் மீது எதிரி போட்ட பிக்சர் டியூப் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அதன் **முன்பகுதி சா.பொ. 1** மற்றும் **உடைந்த பகுதிகள் சா.பொ.2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

இராஜபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் அளித்த இரகசிய வாக்குமூலத்தில் இறந்துபோன எனது சித்தப்பாவின் மீது எதிரி பழைய டிவியை போட்டதாக சொன்னேனா என்றால் பிக்சர் டியூபை போட்டதாகத்தான் சொல்லியுள்ளேன். எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படம் அசாஆ 2 இரகசிய வாக்குமூலத்தில் பழைய டிவி என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் பழைய டிவியின் பிக்சர் டியூப் என்று தான் சொல்லியுள்ளேன். டிவிக்கும் பிக்சர் டியூபுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். எதிரியும் எனது சித்தப்பாவும் சண்டை போட்டுக்கொண்டிருந்தது குறித்து எனக்கு நேரில் தகவல் சொன்னார்களா போனில் சொன்னார்களா என்றால் போனில் சொன்னார்கள். எனதுபுகார் மனுவில் போன் மூலமாக தகவல் கிடைத்ததாக எழுதவில்லை என்றால் தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ளேன். புகாரில் போன் மூலமாக தகவல் கிடைத்ததாக எழுதவில்லை என்றால் சரிதான்.

எனக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் சுமார் இரவு 9.30 மணிக்கு தகவல் கிடைத்தது. எனது வீட்டிற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் பக்கம்தான். இடையில் 3 தெருக்கள் உள்ளன. சம்பவ இடத்திற்கு முதலில் நான் சென்றேனா அல்லது எனது மாமா நல்லதம்பி சென்றாரா என்றால் இருவரும் ஒன்றாகத்தான் சென்றோம். சம்பவ இடத்திற்கு எங்கள் வீட்டிலிருந்து 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நானும் எனது மாமாவும் சம்பவ இடத்திற்கு செல்லும்போது நேரம் சுமார் 9.40 இருக்கும் என்றால் சரிதான். நானும் எனது மாமாவும் சேர்ந்து சென்றிருந்தால் இந்த சம்பவத்தை நாங்கள் தடுத்திருக்கலாம் என்றாலும் உண்மையில் நாங்கள் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றால்

சரியல்ல. சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் நாங்கள் இருந்தோம் என்றால் சுமார் கால் மணி நேரம் இருந்திருப்போம். சுமார் இரவு 9.55 மணி வரை இருந்திருப்போம் என்றால் சரிதான்.

அதன்பின்னர் எங்கு சென்றோம் என்றால் அங்கு தான் இருந்தோம். அப்போது தான் எதிரி பிக்சர் டியூபால் எனது சித்தப்பாவின் தலையில் தாக்கினார். அப்போது அங்கு வேறு ஆட்கள் கூடியிருந்தார்களா என்றால் கூடியிருந்தார்கள். சுமார் 20 முதல் 30 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் 10 நபர்களுக்குள் இருந்திருப்பார்கள். அவர்களை எனக்குத் தெரியுமா என்றால் அனைவரையும் தெரியும். அவர்களில் முக்கால்வாசி பேர் எங்கள் தெருவைச்சேர்ந்தவர்கள். அங்கு இருந்தவர்களின் பெயர்கள் தெரியுமா என்றால் பட்டப்பெயர் தான் தெரியும். உண்மையான பெயர் தெரியாது. குட்டையன், கபாலி, கம்ப்யூட்டர்(தற்போது இறந்துவிட்டார்.), மற்றவர்களின் பெயர்கள் தற்போது ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் அதனால்தான் அவர்களின் உண்மையான பெயர்கள் எனக்குத் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. டிவி கடை யாருடையது என்று எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியும். அவர் தென்றல் நகரைச்சேர்ந்தவர். ஆனால் அவரது பெயர் எனக்குத் தெரியாது. டிவிக்கடை எத்தனை மணிக்கு பூட்டப்படும் என்றால் இரவு 7.00 மணிக்கு பூட்டப்படும். டிவிக்கடையை 7.00 மணிக்கு பூட்டிவிடுவதால் கடையில் உள்ள பொருட்களை யாரும் எடுக்கமுடியாது என்றால் ரிப்பேர் செய்யமுடியாத பொருட்கள் கடையின் வெளியில்தான் கிடக்கும்.

புகாரிலும் போலிசார் விசாரணையிலும் எதிரி எனது சித்தப்பாவை பிக்சர் டியூபால் அடித்ததாக கூறியுள்ள நிலையில், நீதிமன்றத்தில் கொடுத்த இரகசிய வாக்குமூலத்தில் டிவியால் அடித்ததாக முரண்பாடாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தேயே பார்க்கவில்லை என்றாலும் அதனால் தான் இறந்தவர் எதைக்கொண்டு தாக்கப்பட்டார் என்று என்னால் சரியாக

சொல்லமுடியவில்லை என்றாலும் சரியல்ல.

புகாரினை காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து புகாரினை எழுதினேன் என்றால் 12.00 மணி முதல் 1.00 மணிக்குள் இருக்கும். புகாரினை காவல் நியைத்தில் உள்ள காவலரை வைத்து எழுதினேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள சங்கதிகள் அனைத்தும் போலிசாரால் எழுதப்பட்டு என்னால் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

எனது சித்தப்பா நிறைய நபர்களுடன் சேர்ந்து மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனவே அவ்வாறு எனது சித்தப்பாவுடன் மது அருந்திய வேறு யாரோ ஒருவர்தான் எனது சித்தப்பாவை கொலைசெய்துவிட்டார்கள் என்றாலும் எதிரிக்கும் எனது சித்தப்பா இறந்ததற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பாவை யார் ஆம்புலன்சில் ஏற்றினார்கள் என்றால் நான் ஏற்றவில்லை. ஆம்புலன்சில் வந்தவர்கள் ஏற்றினார்கள். என்னுடைய உறவினர்கள் யாரும் எனது சித்தப்பாவை ஆம்புலன்சில் ஏற்றவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் இறந்துபோனவர் எனது சித்தப்பா என்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.2

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நல்லதம்பி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் அம்மன் நகரில் வசித்து வருகிறேன். அசா 1 யைத் தெரியும். அவர் எனது அக்கா மகன் ஆவார். வழக்கில் இறந்துபோனவர் எனக்கு வேலை செய்யும் இடத்தில் அறிமுகம் ஆனவர். ஆஜர் எதிரியை தெரியும். அனைவரும் ஒரே தெருவைச்சேர்ந்தவர்கள் ஆவோம். வழக்கில் இறந்துபோன ராயப்பன் சென்ட்ரிங் வேலை பார்த்து வந்தார். அவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்தது. வேலை முடித்தவுடன் அவருடன் வேலை பார்க்கும் நபர்களுடன் சேர்ந்தும், எதிரி கார்த்தீஸ்வரனுடன் சேர்ந்தும் மது அருந்துவார்.

சம்பவத்தன்று நானும் அசா 1 ம் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம். சம்பவ தேதியான 22.07.2023 ம் தேதி இரவு 9.45 மணி முதல் 10.00 மணிக்குள் அசா 1 க்கு தொலைபேசியில் அழைப்பு வந்தது. அதில் பேசியவர் அசா 1ன் சித்தப்பா ராயப்பனுக்கும் எதிரி கார்த்தீஸ்வரனுக்கும் இந்திரா நகர் முக்கில் வைத்து சண்டை நடந்து கொண்டிருப்பதாக தகவல்

சொன்னார்கள். உடனே நானும் அசா 1ம் இந்திரா நகர் முக்கிற்கு சென்றோம். அங்கு ராயப்பனும் கார்த்தீஸ்வரனும் வாய்த்தகராறு செய்துகொண்டிருந்தார்கள். அப்போது கார்த்தீஸ்வரன் ராயப்பனிடம் மது அருந்துவதற்கு பணம் கேட்டார். அதற்கு ராயப்பன் மறுக்கவே எப்போதும் நீதானேடா பணம் கொடுப்பாய். புதுசாக என்னை வாங்கச்சொல்கிறாய் என்று கார்த்தீஸ்வரன் சொன்னார். அதற்கு ராயப்பன் நான் வாங்கும் சம்பளம் எல்லாம் உனக்கு குடிக்க வாங்கிக்கொடுத்தே காலியாகிவிடுகிறது என்று சொல்லி இரண்டு பேரும் கெட்ட வார்த்தைகளால் மாறி மாறி திட்டிக்கொண்டார்கள். ராயப்பன் கார்த்தீஸ்வரனை பார்த்து நீ இந்த பொழப்பு பொழப்பதற்கு வேறு மாதிரி பொழைக்கலாம் என்று சொன்னார். உடனே கார்த்தீஸ்வரன் ஆத்திரமடைந்து என்னையவே பேசுகிறாயா என்று பூட்டிக்கிடந்த டிவிக்கடைக்கு வெளியில் உபயோகப்படாத பிக்சர் டியூபுகள் கிடந்தது., அதில் ஒன்றை கார்த்தீஸ்வரன் எடுத்து ராயப்பனின் தலையில் எறிந்தான். அதன் காரணமாக ராயப்பனின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தமாக ஆகிவிட்டது. உடனே அசா 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து தகவல் சொன்னார். மேலும் சித்திரை முத்து 3 வது சாட்சிக்கு போன் செய்து தகவல் சொன்னார். 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் காயம்பட்ட ராயப்பனை ஏற்றி இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

ராயப்பனை சிகிச்சைக்கு உள்ளே அழைத்து சென்றார்கள். நாங்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தோம். இரவு 12.00 மணியளவில் ராயப்பன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். அசா 1 இராஜபாளையம் வடக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றார். சம்பவம் குறித்து இராஜபாளையம் நீதித்துறை நடுவரிடம் இரகசிய வாக்குமூலம் அளித்தேன். அந்த இரகசிய வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த **இரகசிய வாக்குமூலம் அசாஆ 3** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் இருக்கும் தெருவும் அசா 1 வசிக்கும் தெருவும் வெவ்வேறு

தெருக்கள் என்றால் சரியல்ல. ஒரே தெருதான். அசா 1 வசிப்பது மருதுநகர் கிழக்கு அம்மன் நகர் என்றால் சரிதான். நான் செண்பகத்தோப்பு வழியில் உள்ள ஜே ஜே காலனியில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அது எனது தாயாரின் வீடு ஆகும்.

போலிசார் விசாரணையில் நான் செண்பகத்தோப்பு ரோடு ஜே ஜே காலனியில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்று அவ்வாறு தான் சொன்னேன். சம்பவம் குறித்து யாருக்கு முதலில் தகவல் கிடைத்தது என்றால் அசா 1க்கு தகவல் கிடைத்தது. அச்சமயம் அசா 1ன் வீட்டில் நான் இருந்தேன். அசா 1க்கு யார் தகவல் சொன்னது என்று எனக்குத் தெரியாது என்றால் அவரது கைப்பேசிக்கு அழைப்பு வந்தது. யார் அழைத்தது என்று தெரியாது. அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 9.45 மணி இருக்கும். அந்த நேரத்தில் அசா 1 ன் வீட்டில் எதற்காக நான் இருந்தேன் என்றால் இருவரும் ஒரே கட்டிடத்தில் நடந்து வரும் கட்டுமான பணியில் வேலை பார்த்து வருகிறோம். அவர் சென்டரிங் வேலை பார்க்கிறார். நான் எலெக்ட்ரிசியனாக பணி செய்கிறேன். இருவரும் அப்போதுதான் வேலை முடித்து வந்தோம். எங்கள் இருவரின் வீடும் அம்மன் நகரில் அருகாமையில் உள்ளது.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் அசா 1 வீட்டில் இல்லை என்றாலும் ஜேஜே காலனியில் உள்ள எனது தாயாரின் வீட்டில் இருந்தேன் என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு யார் முதலில் சென்றது என்றால் இருவரும் சேர்ந்துதான் சென்றோம். நாங்கள் செல்வதற்கு முன்பு அங்கு கூட்டம் கூடியிருந்ததா என்றால் கூடியிருந்தது. அங்கு 10, 20 பேர் இருந்திருப்பார்கள் என்றால் லைட் வெளிச்சம் இல்லை.இருட்டாக இருந்தது. எத்தனை பேர் என்று கவனிக்கவில்லை. அங்கிருந்த நபர்களில் யாரையாவது எனக்கு அடையாளம்

தெரியுமா என்றால் எனக்குத் தெரியவில்லை. போக்குவரத்து ரோட்டில் அந்த வழியாக சென்றவர்கள் அங்கு நின்றார்கள். எனது தெருக்காரர்கள் யாரும் அங்கு இல்லை. நானும் அசா 1ம் ஒரே தெருவைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நாங்கள் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் 9.45 மணி இருக்கும். நாங்கள் செல்லும்போது அங்கு இருந்த 10, 20 பேர்கள் எவ்வளவு நேரமாக அங்கு நின்றிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு இறந்தவர் யாருடன் சண்டை போட்டார் என்று தெரியாது. நாங்கள் சென்றபோது கார்த்தீஸ்வரனுக்கும் இறந்தவருக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. எவ்வளவு நேரமாக சண்டை நடைபெற்றது என்றால் நாங்கள் செல்வதற்கு முன்பிருந்தே சண்டை நடைபெற்றது. நாங்கள் செல்லும்போது சுமார் கால் மணி நேரம் சண்டை போட்டிருப்பார்கள். நாங்கள் செல்வதற்கு முன்போ சென்ற பின்போ யாரும் சண்டையை விலக்கிவிடவில்லை என்றால் சரிதான். அவர்களுக்குள் வாய்த்தகராறு நடைபெற்றது.

உண்மையில் எதிரி இறந்தவருடன் சண்டை போட்டிருந்தால் நானும் அசா 1ம் சண்டையை விலக்கிவிட்டு இருப்போம் என்றாலும் கால் மணி நேரம் வேடிக்கை பார்த்திருக்கமாட்டோம் என்றாலும் நாங்கள் சம்பவத்தன்று சம்பவ தேதியில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

டிவியிலும் டிவி பிக்சர் டியூபிற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். பிக்சர் டியூப் என்பது சுமார் 10 செமீ முதல் 15 செமீ நீளம் இருக்கும் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் சொன்னதுபோல் இறந்தவரை பிக்சர் டியூப்பை வைத்து அடித்து கொல்ல முடியாது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ. 1 மற்றும் 2 ல் பிக்சர் டியூப் பகுதி இல்லை என்றால் சரிதான் .

இறந்தவரை யார் ஆம்புலன்சில் ஏற்றியது என்றால் ஆம்புலன்சில் வந்தவர்கள் ஸ்டெச்சரில் வைத்து ஏற்றினார்கள். நானோ, அசா 1 , அசா 1ன்

உறவினரோ காயம்பட்டவரை ஆம்புலன்சில் ஏற்றவில்லை. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும், சென்றிருந்தால் நானும், அசா 1 ம் சேர்ந்து காயம்பட்டவரை ஆம்புலன்சில் ஏற்றியிருப்போம் என்றாலும் எனவே நாங்கள் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

அசா 1 உடன் நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். அப்போது இரவு சுமார் 12.00 மணி இருக்கும். புகாரினை போலிசார் தான் எழுதினார்கள் என்றால் அசா 1 தான் எழுதினார். அந்த புகாரில் நான் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் போலிசாரின் ஆலோசனையின் பேரில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் நான் அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இறந்தவருக்கு குடிப்பழக்கம் உண்டு என்றாலும் அவர் பல நபர்களுடன் சேர்ந்து குடிப்பதை வழக்கமாக கொண்டுள்ளவர் என்றாலும் சரியல்ல. அவ்வாறு இறந்த நபருடன் சேர்ந்து மது அருந்திய யாரோ ஒருவர் தான் இறந்தவரை அடித்து கொலை செய்துவிட்டார் என்றாலும் அவரது இறப்பிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

அசா 1 சித்திரை முத்து எனக்கு என்ன உறவுமுறை என்றால் அக்கா மகன் ஆவார். இறந்த ராயப்பன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் உறவுமுறை தெரியாது. ஆனால் தூரத்து உறவு ஆகும். அசா 1 ம் இறந்தவரும் எனக்கு உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.3

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மாரிக்குமார் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 10th day of November, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் தாட்கோ காலனியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். வழக்கில் இறந்துபோனவரை எனக்குத் தெரியும். அவர் எனக்கு சகலை ஆவார். அவர் பெயர் ராயப்பன் ஆகும். அவருக்கு குடிப்பழக்கம் உண்டு. ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் கார்த்தீஸ்வரன். எதிரியும் இறந்து போன ராயப்பனும் ஒன்றாக மது அருந்துவதை வழக்கமாக கொண்டவர்கள்.

கடந்த 22.07.2023 ம் தேதி இரவு 10.10 மணிக்கு நான் வீட்டில் இருந்தேன். அப்போது எனக்கு போன் வந்தது. அதில் பேசியவர் உனது சகலையும் எதிரி கார்த்தீஸ்வரனும் சண்டைபோட்டுக்கொண்டிருப்பதாகவும், உடனே வருமாறும் கூறினார்கள். எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்ன நபர் தெரிவித்த இடமான இந்திரா நகர் முக்கில் உள்ள டிவிக்கடைக்கு அருகில் சென்றேன். அப்போது அங்கு எதிரிக்கும் இறந்துபோனவருக்கும் இடையே வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. மது வாங்குவது சம்பந்தமாகவும், உணவு வாங்குவது

சம்பந்தமாகவும் இருவருக்கும் இடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. இருவரும் போதையில் இருந்தார்கள். எதிரி கார்த்தீஸ்வரனுக்கு கஞ்சா அடிக்கும் பழக்கம் உண்டு. கார்த்தீஸ்வரன் அதிக போதையில் முரட்டுத்தனமாக இருந்தார். அருகில் எங்களால் செல்ல இயலவில்லை. இருவரும் அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டார்கள். அப்போது டிவிக்கடையின் வெளியில் இருந்த கண்ணாடியால் ஆன ஊசி போன்ற டிவியின் உட்பாகத்தை கொண்டு கார்த்தீஸ்வரன் டம் டம் என்று இரண்டு முறை முகத்திலேயே போட்டார். உடனே ராயப்பன் கீழே விழுந்துவிட்டார். இரத்தத்தை பார்த்து எங்களுக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. உடனே ஆம்புலன்சிற்கு போன் செய்தோம். 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் காயம்பட்ட ராயப்பனை இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

பின்னர் அசா 1 நடந்த சம்பவத்திற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். சம்பவம் சம்பந்தமாக இராஜபாளையம் நீதித்துறை நடுவர் முன்பு ஆஜராகி இரகசிய வாக்குமூலம் அளித்தேன். அந்த **இரகசிய வாக்குமூலம் அசாஆ 4** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

போலிசார் விசாரணையில் எனக்கு போன் மூலமாக தகவல் கிடைத்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு யாரும் போன் மூலமாக தகவல் சொல்லவில்லை என்றாலும் நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு அசா 1 , அசா 2 ஆகியோர்களுடன் சுமார் 20 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அசா 1 ம் அசா 2 ம் நான் செல்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்றார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு யார் போன் செய்தது என்றால் யார் என்று தெரியாது. நானும் இறந்தவரும் சகலை

என்று தெரிந்த யாரோ ஒரு நபர்தான் எனக்கு போன் செய்திருப்பார். நான் சம்பவ இடத்திற்கு சென்ற பின்னர் எவ்வளவு நேரம் சண்டை நடைபெற்றது என்றால் சுமார் கால் மணி நேரம் சண்டை நடந்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பு எவ்வளவு நேரமாக சண்டை நடைபெற்றது என்றால் எனக்குத் தெரியாது. உண்மையில் நான் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் கால் மணி நேரமாக சண்டையை வேடிக்கை பார்க்காமல் சண்டையை விலக்கிவிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. இருவரும் போதையில் இருந்தார்கள். பயத்தின் காரணமாக நாங்கள் அருகில் செல்லவில்லை. சம்பவ இடமானது இருட்டான இடம் என்றால் சரிதான். அங்கு வெளிச்சம் கிடையாது. இருட்டாக இருந்ததால் குறிப்பாக எந்த பொருளால் யார் யாரை அடித்தது என்று நான் பார்க்க இயலாது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ல் எனது முதல் விசாரணையில் சொன்ன கண்ணாடியால் ஆன ஊசி போன்ற டிவியின் உட்பாகம் இல்லை என்றால் சரியல்ல. அது உடைந்த நிலையில் உள்ளது. உடைந்த நிலையில் உள்ள ஊசி பகுதி பிக்சர் டியூப் கிடையாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 108 ஆம்புலன்சிற்கு யார் போன் செய்தது என்றால் அசா 1 போன் செய்தார். காயம்பட்டவரை நாங்கள் ஆம்புலன்சில் ஏற்றினோமா என்றால் நாங்கள் யாரும் அவரை தொடவில்லை. ஆம்புலன்சில் வந்தவர்கள் ஏற்றினார்கள். நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும் உண்மையில் சம்பவ இடத்திற்கு சென்றிருந்ததால் காயம்பட்ட எனது சகலையை ஆம்புலன்சில் ஏற்றியிருப்போம் என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

போலிசார் விசாரணையில் எதிரி காயம்பட்டவர் மீது டிவியை போட்டாரா அல்லது பிக்சர் டியூப்பை போட்டாரா அல்லது ஊசி போன்ற உட்பாகத்தை போட்டாரா என்று எதைக்குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் டிவியை போட்டதாக சொல்லியுள்ளேன். இறந்தவர் எனக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.